# Mille feuilles

## பெற்றோர்களுக்கான தகவல்கள்




schulverlag plus

அன்புள்ள பெற்றோர்களே

உங்கள் பிள்ளை «Mille feuilles» உடன் பிரெஞ்சு மொழி கற்றுக் கொள்கிறது. இந்த கற்பித்தல் உபகரணத்தில் என்ன இருக்கிறது மற்றும் இது இந்த வெளிநாட்டு மொழியை உங்கள் குழந்தை கற்றுக் கொள்ள எப்படி உதவப் போகிறது என்பதைப் பற்றியும் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா?

«Mille feuilles»பற்றிய இந்த மற்றும் பிற கேள்விகளுக்கான பதில்களை நீங்கள் இந்த சிற்றேட்டில் காணலாம். கற்றலில் உங்கள் பிள்ளையை நீங்கள் எவ்வாறு உகந்த முறையில் ஆதரிக்க முடியும் என்பதை மேலும் கண்டறியவும்.

**பொருளடக்கம்**


| | |
|---|---|
| நவீன பிரெஞ்சு கற்பித்தல் உபகரணம் | 3 |
| «Mille feuilles»-பிரபஞ்சம் | 4 |
| «Mille feuilles» உடன் பிரெஞ்சு கற்றல் | 5 |
| «Mille feuilles» இன் 10 நன்மைகள் | 12 |
| தவறு செய்ய தைரியம் | 17 |
| நீங்கள் உங்கள் பிள்ளையை எவ்வாறு உகந்த முறையில் ஆதரிக்க முடியும் | 18 |

# நவீன பிரெஞ்சு கற்பித்தல் உபகரணம்

நீங்கள் பள்ளியில் பிரெஞ்சு அல்லது வேறு ஒரு வெளிநாட்டு மொழியைக் கற்றுக்கொண்டு வெகுநாட்கள் ஆகவில்லை என்று தோன்றுகிறதா? பாடத்தின் «தலைப்பு» பெரும்பாலும் இலக்கணம் சார்ந்ததாகவே இருந்தது என்பதை நினைவு கொள்கிறீர்களா?

**உங்கள் குழந்தை இன்று பிரெஞ்சு கற்றுக் கொள்ளும்போது, குழந்தைகளுக்கு இந்த வயதில் ஆர்வத்தை கொடுக்கக்கூடிய தலைப்புகளைப் படிக்கிறார்கள். உங்கள் பிள்ளை உற்சாகமான தலைப்புகளைக் கையாளும்போது இலக்கண கட்டமைப்புகளை எதிர்கொள்கிறது, இதன்மூலம் செயல்பாட்டு முறைகளைத் தீர்மானிக்கிறது. அதே நேரத்தில் இதுவரை அறியாத வார்த்தைகளைக் கண்டுபிடிக்கிறது. வெளிப்படையாக வடிவமைக்கப்பட்டுள்ள பயிற்சிகள், பொருளடக்கம், வார்த்தைகள் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள செயல் முறைகள் இவற்றின் அரத்தங்களை அவர்கள் கண்டறிய உதவுகிறது.**

«Mille feuilles» போன்ற நவீன கற்பித்தல் உபகரணம் ஒரு கற்கும் சூழலை உண்டாக்குகிறது, இது மாணவர்களுக்கு செயல்திறன்மிக்க அறிவை உருவாக்கவும் மற்றும் அவர்களின் கற்றல் செயல்முறையின் போக்கை வடிவமைக்கவும் உதவுகிறது. இந்த சிறந்த வடிவமைப்புச் சுதந்திரம், அவர்களின் வளம், திறமை மற்றும் ஆர்வத்திற்கு ஏற்ற வகையில் பயிற்சிகளைத் திருத்தி அமைக்க உங்களை அனுமதிக்கிறது,

தகவல் தொடர்புக்கான உண்மையான தேவை இருக்கும்போது தான், ஒரு மொழி திறமையாக கற்றுக் கொள்ளப்படுகிறது. «Mille feuilles» பலவிதமான கற்பித்தல் சூழ்நிலைகளை உருவாக்க விடுகிறது, இதில் மாணவர்கள் வெற்றிகரமாக எப்படி ஒரு மொழியின் உதவியுடன் செயல்பட முடியும் என்பதை அனுபவிக்கிறார்கள்: ஒரு விளையாட்டை விளையாடுதல், ஒரு கதையைச் சொல்லுதல், ஒரு அறிக்கை எழுதுதல் போன்றவை.

பின்வரும் பக்கங்களில் «Mille feuilles»-பிரபஞ்சத்தின் கூறுகளைக் கண்டறியுங்கள் மேலும் ஒரு கற்றல் பிரிவின் பொதுவான அமைப்பு எப்படி இருக்கும் என்பதை அறியுங்கள்.


# «Mille feuilles»-பிரபஞ்சம்

magazines என்றழைக்கப்படும் பணிப் புத்தகங்கள் கற்றல் உபகரணங்களின் அடித்தளமாக அமைகின்றன. தேவைகளுக்கு ஏற்ப மாணவர்கள் அச்சிடப்பட்ட கையேட்டிலோ அல்லது டிஜிட்டல் பதிப்பிலோ வேலை செய்கிறார்கள். கூடுதலாக அவர்கள் கற்றல் செயல்முறையை ஆவணப்படுத்தும் சொற்களஞ்சியப் பெட்டி fichier மற்றும் revue ஆகிய இரண்டும் கற்பித்தல் உபகரணத்தின் ஒருங்கிணைந்த பகுதிகள். கற்பவர்களுக்கு கூடுதல் உபகரணமாக அகராதி «mini-dic», மேலும் 5-ஆம் வகுப்பிலிருந்து «midi-dic», இலக்கணப் புத்தகம் «mini-grammaire» மற்றும் மொழி விளையாட்டுப் பெட்டி «On bavarde?» கிடைக்கிறது.

**magazine: தலைப்புப் புத்தகம் மற்றும் பணிப்புத்தகம்**




அச்சிடப்பட்ட **magazines**




டிஜிட்டல் **magazines**

**revue: கண்ணோட்டக் கையேடு**

+




அச்சிடப்பட்ட **revue**

**fichier: சொல்லகராதிப் பயிற்சியாளர்**

+




குறியீட்டு அட்டையுடன் கூடிய சொற்களஞ்சியப் பெட்டி



டிஜிட்டல் **fichier**


+




+




+





+



# «Mille feuilles» உடன் பிரெஞ்சு கற்றல்

## «Mille feuilles»இல் ஒரு கற்றல் பிரிவின் அமைப்பு

ஒரு ஆண்டில் கற்பவர்கள் பல magazinesஇல் வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு magazine ம் பின்வருமாறு வடிவமைக்கப்படுகிறது:




ஒரு கற்றல் பிரிவு parcours என்று அழைக்கப்படுகிறது. இது சம்பந்தப்பட்ட magazine இன் தலைப்பைக் குறிப்பிடுகிறது பிரெஞ்சு கேட்கும் மற்றும் படிக்கும் உரைகளில் பல்வேறுபட்ட பயிற்சிகள் மற்றும் மொழி பயன்பாடுகள் மையமாக வைக்கப்பட்டுள்ளது. இந்த activités இல் மாணவர்கள் படிப்படியாக உள்ளீடுகளை மறைவிலக்கம் செய்து புரிந்துகொண்டு செயலாற்ற அறிவுறுத்தப்படுகிறார்கள்

மாணவர்கள் உலகத்தைப் பற்றிய புதிய அறிவைப் பெறுகிறார்கள், மேலும் அதே நேரத்தில் மொழியையும் கற்றுக் கொள்கிறார்கள். tâcheஇல் parcours இன் முடிவில் ஒரு சவாலான பயிற்சியில், அவர்கள் கற்றுக் கொண்டவற்றை பயன்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெறுகிறார்கள். revue இல் பெறப்பட்ட அறிவுகளைப் பதிவு செய்கிறார்கள்


## Le chemin de l'école

### 1. Samuel

Salut. Je m'appelle Samuel.
J'ai 13 ans.

J'habite en Inde.

Je vais à l'école avec mes 2 frères.
Je vais à l'école en fauteuil roulant.
Je ne peux pas marcher depuis ma naissance.

J'habite à 1 heure et quart en fauteuil roulant de l'école.

Mon école est à 4 kilomètres de ma maison.

Les conditions sur notre chemin sont difficiles.

à l'école
in die Schule
avec mes 2 frères
mit meinen beiden Brüdern
depuis ma naissance
seit meiner Geburt
1 heure et quart
eineinviertel Stunden
de ma maison
hier: von meinem Zuhause
les conditions
die Bedingungen
notre chemin
unserem Weg
difficiles
schwierig

14

«Mille feuilles 3»

# உள்ளீடு

**கேட்கும்- மற்றும் படிக்கும் உரைகள்**
ஆரம்பத்திலிருந்தே மாணவர்கள் parcours இன் கருப்பொருளுடன் பொருந்துகின்ற பிரெஞ்சு உரைகளை எதிர்கொள்கிறார்கள், எனவே அவை ஒருபோதும் தனிமைப்படுத்தப்படவில்லை. உள்ளீடுகள் பல்வேறு மூலங்களிலிருந்து வருகின்றன மேலும் வயதுக்கு ஏற்ற மொழியைப் பயன்படுத்துகின்றன. குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு வேடிக்கையான அல்லது உற்சாகமான ஒன்றைச் சொல்வது அல்லது அவர்களுக்கு சுவாரஸ்யமான மற்றும் அறிவுப்பூர்வமான ஒன்றைச் சொல்வதே இதன் நோக்கம்.

**உங்கள் பிள்ளை அவர்கள் விரும்பும் போதெல்லாம் பிரெஞ்சு உரைகளைக் கேட்க விடுங்கள் உரைகளை முறையாக மொழிபெயர்ப்பதைத் தவிர்க்கவும். இந்த கட்டத்தில் உங்கள் பிள்ளை எல்லாவற்றையும் விரிவாகப் புரிந்து கொள்ள வேண்டியதில்லை.**


## La coccinelle

La coccinelle est un insecte avec 4 ailes. Elle marche et vole.

La coccinelle vit dans les jardins, les prés et les champs.

Elle est active le jour.

La coccinelle est rouge, noire ou jaune, avec des points.

Elle mesure entre 3 et 5 mm.

La coccinelle mange jusqu'à 100 pucerons par jour.

Elle pond entre 100 et 400 œufs par an.

La coccinelle aide les plantes en mangeant des pucerons.

elle
hier: er
rouge
rot
des points
Punkten
pucerons
Blattläuse

17

«Mille feuilles 3»


**புரிந்துகொள்ளும் உபகரணமாகப் படங்கள்**
பக்கங்களின் வரிசையால் ஏமாற வேண்டாம்: ஒரு parcours இன் ஆரம்பம், ஆழம் பார்த்துக் கால் விடுவதைப் போன்றதல்ல! உள்ளீட்டு உரைகளுக்கு மாணவர்கள் அறிமுகப்படுத்தப்படும் activité-இல் வேலை செய்வதுடன் parcours ஆரம்பமாகிறது. உரைகளைக் கேட்பதும் படிப்பதும் எப்போதும் அறிவுறுத்தப்படுகிறது. ஆரம்பத்தில் கற்பவர்கள் வழக்கமாக உள்ளடக்கத்தின் சாரத்தை மட்டுமே புரிந்து கொள்வார்கள். படங்கள் இவற்றை மறைவிலக்கம் செய்து கண்டுபிடிக்க உதவுகிறது.

## Activités

### உள்ளடக்கத்தை மறைவிலக்கம் செய்து கண்டுபிடித்தல்

activités இல் மாணவர்கள் முதலில் உள்ளீட்டு உரைகளை மறைவிலக்கம் செய்து கண்டுபிடிக்கிறார்கள். பின்னர் tâche க்கு தீர்வுகாணத் தயாராகிறார்கள். activités இல் பணிபுரியும்போது அவர்கள் மொழி கற்றல் உத்திகள் *, இலக்கண கட்டமைப்புகள் மற்றும் விதிகள் தவிர கருப்பொருள் மற்றும் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான சொற்களையும் கற்கிறார்கள். மாறுபட்ட பயிற்சிகள் படித்தல், கேட்டல், பேசுதல் மற்றும் எழுதுதலுக்கு ஏராளமான வாய்ப்புகளைத் தருகின்றன. பொதுவாக திறந்த மற்றும் பல படிகளை கொண்ட பயிற்சிகள், மாணவர்கள் மொழியையும் அதன் உள்ளடக்கத்தையும் தாங்களாகவே கண்டறியும் வாய்ப்பை அவர்களுக்குத் தருகின்றன. பொதுவாக பல்வேறு தீர்வுகள் மற்றும் முடிவுகள் சாத்தியமாகும். activités உள்ளடக்கத்துடன் தொடர்புடையதாகவும் கற்பவர்களுக்கு அர்த்தமுள்ளதாகவும் இருக்கும். சூழலிலிருந்து பிரிக்கப்பட்ட, வார்த்தைகள் மற்றும் விதிகளுக்கான தனிப்பட்ட பயிற்சி விதிவிலக்காகும், இந்நிலை tâche ஐ தீர்க்க உதவும் என்றால் மட்டுமே எதிர்கொள்ள நேரும்.**

**உங்கள் பிள்ளைகள் வீட்டுப் பாடங்களை முடிக்க அவர்களுக்கு உதவுங்கள். பயிற்சிகளை அவ்வப்போது முடித்து வைத்திருங்கள். உங்கள் குழந்தைகளுக்கு «Mille feuilles»இல் வழங்கப்படாத பயிற்சிகளை நீங்கள் சொந்தமாக உருவாக்க வேண்டும் என்ற அவசியமில்லை.**


Activité F

Le chemin de l'école

Du erfährst Interessantes über den Schulweg von Kindern auf der ganzen Welt.
Du sprichst über deinen eigenen Schulweg.

Hören | Lesen | Lesen | Sprechen | Kulturen im Fokus

1. Regardez les photos aux pages 14 à 17. Samuel habt ihr schon kennen gelernt. Schaut die Bilder der anderen Kinder an und stellt Vermutungen an. Racontez en allemand.

Bilder nutzen
Namen und Zahlen markieren
Die Bedeutung erraten

2. Écoutez et lisez les textes. Wie heissen die 4 Kinder? Wo wohnen sie?

3. Sucht und markiert die beiden Sätze in allen Texten:

Je m'appelle…
J'habite…

racontez – erzählt
leurs pays – ihre Länder
la grille – die Tabelle

4. Note les noms des enfants et leurs pays dans la grille.

| nom de l'enfant | pays |
|---|---|
| Samuel | Inde |
| | |
| | |
| | |
| | |

5. Vergleicht eure Tabellen und sucht auf der Weltkarte, wo die 5 Kinder leben.

40

«Mille feuilles 3»

### தெளிவான பயிற்சிகள்

தனிப்பட்ட வெற்றியை மாணவர்கள் அனுபவிக்கும் போது இது குறிப்பாக அவர்களை ஊக்குவிக்கிறது. «Mille feuilles» இல் activités செய்யும்போதும் இந்நிலை இருக்க வேண்டும். கடினமான பயிற்சிப் பணிகள் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டிருக்கிறது, இதன் மூலம் மாணவர்கள் ஆரம்பத்திலிருந்தே தன்னிச்சையாக செயல்பட முடியும், பிரெஞ்சு பயிற்சிப் பணிகளைப் புரிந்துகொள்வது படிப்படியாகக் கட்டமைக்கப்படுகிறது. கற்பவர்கள் பயிற்சிகளைப் புரிந்து கொள்ள முடியும் என்பது முக்கியம்.

* மொழி கற்றல் உத்திகள்: கற்றலை எளிதாக்கும் நுட்பங்களையும் நடைமுறைகளும் இதனால் கற்றுக்கொள்கிறார்கள்

** «Mille feuilles»மூலம் உங்கள் பிள்ளை பெறும் சொற்களஞ்சியம், இலக்கணம், உச்சரிப்பு மற்றும் உத்திகள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை நீங்கள் revueல் காண்பீர்கள்.

# Tâche

**கற்றுக்கொண்டதைப் பயன்படுத்துங்கள்**
ஒரு parcours இன் முடிவில் மாணவர்கள் ஒரு பெரிய பயிற்சியை செய்வார்கள், அது tâche. activitésஇல் கற்றுக்கொண்டது இப்போது பயன்பாட்டுக்கு வருகிறது. கற்பவர்கள் ஒரு பிரெஞ்சு கதையை எழுதி விளக்குகிறார்கள், எடுத்துக்காட்டாக, ஒரு விளையாட்டை உருவாக்கி விளையாடுகிறார்கள், வகுப்பு மேடையில் ஒரு அரங்கத்தை உருவாக்குகிறார்கள், ஒரு உருவப்படத்தை வரைகிறார்கள், தங்கள் சொந்த கண்டுபிடிப்பை விவரிக்கிறார்கள் மற்றும் பல.



Tâche

Mon **portrait**

**Du gestaltest ein Porträt von dir und erzählst anderen etwas über dich und deinen Schulweg.**

Sprechen | Schreiben | Schreiben

1. Fais un portrait et parle de toi.
   Schreibe auf:
   – wie du heisst, wie alt du bist und wo du wohnst.
   – wie weit es zur Schule ist, wie du zur Schule gehst und mit wem.
   – was du in deinem Rucksack mitnimmst.

parle de toi — sprich über dich

2. Fais ton portrait sur une affiche.

Musterwörter und -sätze verwenden

3. Écris en français. Die Beispielsätze helfen dir:

**Moi**
Je m'appelle…
J'ai… ans.
J'habite à…, en…
…

**D'autres informations** Weitere Informationen
J'ai un frère.
une sœur.
J'ai 2 frères.
…sœurs.
J'aime le foot. Fussball
la danse. Tanzen
lire. Lesen
chanter. Singen
jouer. Spielen
…

**Mon chemin de l'école**
J'habite à… mètres/kilomètres de l'école.
J'habite à… minutes/heures de l'école.

**Comment?** Wie?
Je vais à l'école à pied.
à vélo.
à trottinette.
en tram.
en train.
en voiture.


**Avec qui?** Mit wem?
Je vais à l'école avec mes copains.
mes copines.
ma sœur.
mon frère.
…

**Mon sac à dos**
Dans mon sac à dos, il y a…
une trousse.
un livre.
des stylos.
…

62–65

55

«Mille feuilles 3»



Tâche

Un jeu de **loto animalier**

**Du spielst ein Tierlotto. Dabei sprichst du Französisch.**

Sprechen

**La préparation**

la préparation — die Vorbereitung
découpe — schneide aus

1. Unterteile ein A4-Blatt in 6 gleich grosse Felder.
2. Découpe 6 images de la page 61.
3. Klebe die Bilder auf deine 6 Felder.

   Möchtest du ein anderes Tier ins Spiel bringen? Du kannst sein Bild auf ein Feld zeichnen.
   Schreibe einen französischen Satz auf einen separaten Zettel dazu. Schaue auf Seite 63.

4. Découpez les cartes à la page 63.
   Als Gruppe braucht ihr nur die Textkarten aus einem *magazine*.
5. Bereitet kleine Zettel zum Abdecken der Felder vor.
6. Legt die Karten in einen Sack oder dreht sie auf dem Tisch mit dem Text nach unten.
7. Écoutez les phrases du loto et entraînez-vous à les lire.

68

58

«Mille feuilles 3»

**இந்தப் பயிற்சிகளுக்குத் தீர்வு காண்பது, மாணவர்கள் பள்ளி சார்ந்த மற்றும் சாராத சூழ்நிலைகளில் பிரெஞ்சு மொழியைப் பயன்படுத்த உதவுகிறது.**

## டிஜிட்டல் magazines

### ஆடியோ பதிவுகள், வீடியோக்கள் மற்றும் விளையாட்டுகளுக்கான இலவச அணுகல்

டிஜிட்டல் magazines அச்சிடப்பட்ட கையேடுகளை போலவே இருக்கின்றன, ஆனால் இவை மாணவர்களுக்கு கூடுதல் வாய்ப்புகளை அளிக்கின்றன பெரும்பாலும் கற்பவர்கள் பதிவுகளை மீண்டும் மீண்டும் கேட்க அல்லது பார்ப்பதில் மற்றும் கதைகளை பல முறை சொல்ல விட வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள் . ஆடியோ பதிவுகள் மற்றும் வீடியோக்கள், மட்டுமின்றி கற்றல் திட்டங்கள் மற்றும் விளையாட்டுகள் போன்ற அனைத்து டிஜிட்டல் உள்ளடக்கங்களுக்கும் மாணவர்களுக்கு இலவச அணுகல் உள்ளது. டிஜிட்டல் magazines கற்பவர்களுக்கு சிறந்த கூடுதல் மதிப்பைக் அளிக்கிறது.



**முடிந்தால் உங்கள் பிள்ளைகளுக்கு கணினி அணுகலை அளியுங்கள். டிஜிட்டல் உள்ளடக்கத்தைப் பயன்படுத்த அவர்களை ஊக்குவியுங்கள்.**

கணினி அல்லது டேப்லெட்டில் தன்னிச்சையாக வேலை செய்வது கற்றலுக்கான உந்துதலையும் கற்றலில் வெற்றியையும் அதிகரிக்கிறது மற்றும் இது நேர்மறையாக மாணவர்களால் கருதப்படுகிறது.



டிஜிட்டல் magazines ஐ இங்கே காணலாம்:
www.1000feuilles.ch



## Fichier

**Fichier digital**

டிஜிட்டல் fichierஆல் வார்த்தை பயிற்சி விளையாட்டாகிறது. 3 முதல் 6 ஆம் வகுப்பு வரையிலான அனைத்து சொற்களஞ்சியத்தையும் டிஜிட்டல் fichierஇல் பயிற்சி செய்யலாம். மாணவர்கள் இந்தத் தலைப்புகளை «Vocabulaire de classe» (வகுப்பு சொற்களஞ்சியம்), «Nous parlons français!» (வகுப்பறை மற்றும் அன்றாட



சொற்களஞ்சியம்), «Consignes» (அறிவுறுத்தலுக்கான சொற்களஞ்சியம்) magazinesஇலிருந்து மீண்டும் பெறுவார்கள். மொழிபெயர்ப்பு வழியைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு அவர்களுக்கு உள்ளது. அவர்கள் தவறான மொழிபெயர்ப்பை அளித்திருந்தால், மீண்டும் முயற்சி செய்யலாம். அவர்கள் உடன் படிக்கும் மாணவர்களுடன் ஒரு போட்டிக்கு சவால் விடலாம். டிஜிட்டல் fichier கற்றல் நிலையை நினைவில் கொள்கிறது.

3 முதல் 6 வது பள்ளி ஆண்டு, பாடத்திட்டத்தின் படி 2 வது சுழற்சி என குறிப்பிடப்படுகிறது. இந்த நேரத்தின் தொடக்கத்தில், மாணவர்கள் இன்னும் காதால் கேட்பதன் மூலம் எழுதலாம். 2 வது சுழற்சியின் போக்கில் மட்டுமே "சரியான முறையில்" எழுதப்பட வேண்டும்.

டிஜிட்டல் fichier இலவச பயன்பாடாகவும், உலாவி பதிப்பாகவும் கிடைக்கிறது: www.s-fichier.ch

**டிஜிட்டல் fichier அல்லது குறியீட்டு அட்டைகளுடன் பயிற்சி செய்ய உங்கள் பிள்ளையை ஊக்குவிக்கவும். நீங்கள் ஒரு போட்டிக்கு சவால் செய்தால் எப்படி இருக்கும்?**

**Fichier அச்சு**

மாணவர்கள் magazinesலிருந்து வகுப்பறை சொற்களஞ்சியங்களை குறியீட்டு அட்டையில் தாங்களாகவே எழுதி, அதை ஒரு பெட்டியில் அடுக்கி வைக்கிறார்கள். கொடுக்கப்பட்ட கலைச்சொற்களை அவர்கள் தனிப்பட்ட வார்த்தைகள் கொண்டு பூர்த்தி செய்கிறார்கள். இவை உள்ளிட்டு உரைகளிலும் தலைப்புகள்«Nous parlons français!» உம் அவர்கள் எதிர்கொண்ட மற்றும் அவர்கள் மனதில் பதிவு செய்து கொள்ள விரும்பும் வார்த்தைகள் மற்றும் வெளிப்பாடுகள் ஆகும். குறியீட்டு அட்டைகள் ஏராளமான சொற்பயிற்சி விளையாட்டுகளுக்கு வாய்ப்பளிக்கிறது.




## Revue

**கற்றல் செய்முறையை கண்கூடாகக் காணும்படி செய்தல்**

revueஇல் மாணவர்கள் தாங்கள் ஒரு முழு பள்ளி ஆண்டில் ஏற்கனவே என்ன கற்றுக் கொண்டார்கள் மற்றும் எந்த அறிவைப் பெற்றார்கள் என்பதைப் பற்றிய ஒரு கண்ணோட்டத்தைக் காண்கிறார்கள். revue முக்கியமான குறிக்கோள்கள் பற்றிய உள் நோக்கைத் தருகிறது மேலும் இது ஒரு முழு பள்ளி ஆண்டிற்கான சொற்களஞ்சியம், இலக்கணம், உச்சரிப்பு மற்றும் உத்திகளைப் பட்டியலிடுகிறது, கற்பவர்கள் revueஐ தீவிரமாகக் கையாளுகின்றனர்: அவர்கள் தங்கள் தனிப்பட்ட சொற்களஞ்சியம் மற்றும் சுயமாக வடிவமைக்கப்பட்ட இலக்கண விதிகளைப் பதிவு செய்கிறார்கள்.

மாணவர்கள் revueஐ ஆசிரியர்களுடன், வகுப்புத் தோழர்களுடன் அல்லது தங்கள் பெற்றோர்களுடன் தாங்கள் கற்றவற்றை அல்லது தங்கள் கற்றல் செயல்முறைகளையும் பற்றி பேச விரும்பும் போது உபயோகிக்கிறார்கள். மேலும் revue ஒரு குறிப்புப் புத்தமாகச் செயல்படுகிறது, எடுத்துக்காட்டாக, magazinesஇல் உள்ள பிரெஞ்சு வழிமுறைகளைப் புரிந்துகொள்வது, ஒரு பணியை செய்வதற்கான பொருத்தமான உத்திகளைத் தேர்ந்தெடுப்பது அல்லது வகுப்பில் தோழர்களுடன் பிரெஞ்சு மொழி பேசும்போது பொருத்தமான சொற்கள் மற்றும் வெளிப்பாடுகளைத் தேர்ந்தெடுப்பது.




Revue 3

**உங்கள் பிள்ளை அவர்கள் புரிந்துகொண்டதையும் கற்றுக்கொண்டதையும் உங்களுக்குக் காண்பிப்பதில் மகிழ்ச்சி அடைவார்கள். revue உதவியுடன் நீங்கள் அவரது அனுபவங்களைப் பற்றி அவருடன் பேசலாம் மற்றும் பிரெஞ்சு மொழியின் உலகத்தில் அவரது கண்டுபிடிப்பு பயணத்தில் அவருடன் இருக்கலாம்.**

# «Mille feuilles» இன் 10 நன்மைகள்

1

## டிஜிட்டல் மற்றும் ஊடாடும்

«Mille feuilles» இன் டிஜிட்டல் வடிவங்களுடன், பிரெஞ்சு மொழியைக் கற்றுக்கொள்வது மிகவும் எளிதானதாகவும் உற்சாகமானதாகவும் மாறிவிட்டது. டிஜிட்டல் magazineஇல் இலவசமாக அணுகக்கூடிய ஆடியோ பதிவுகள் மற்றும் வீடியோக்கள் பல வகைகளை வழங்குகின்றன, மேலும் அவை மாணவர்களுக்கு தகவல் அளிப்பதாக மட்டுமல்லாமல், பொழுதுபோக்காகவும் மற்றும் ஊக்கமளிப்பதாகவும் உள்ளது. ஊடாடும் கற்றல் விளையாட்டுகள் பயிற்சியை எளிதாக்குகின்றன, மேலும் டிஜிட்டல் fichierசொல் கற்றலுக்கான பல்வேறு பயிற்சிகளையும் வழங்குகிறது. இத்தனை வகை வகையான செயல்பாடுகள் கற்றலை மகிழ்ச்சியானதாக ஆக்குகிறது!

2

## பேசுதலை மையப்படுத்தி

எளிதில் கண்டறியக் கூடிய பேச்சுக் குமிழிகளில் கொடுப்பதன் மூலம் «Mille feuilles»இல் வகுப்பிலும் அன்றாட வாழ்க்கையிலும் பயன்படும் பல்வேறு உரையாடல் உதவிகள் இவர்களுக்கு கிடைக்கின்றன. பேச்சு பயிற்சியின் போது, குறிப்பிட்ட பள்ளி சூழ்நிலைகளில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது - ஏனென்றால் இங்கு அவர்களுக்கு தகவல் தொடர்புக்கான உண்மையான தேவை உள்ளது. ஜோடிகளாகவும், குழுக்களாகவும் பணிபுரியும் போது, பிரஞ்சு பேசும் நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது, மேலும் தவறுகளைச் செய்ய பயப்படுவதில்லை. 5 மற்றும் 6 ஆம் வகுப்புகளில் உள்ள மாணவர்கள் «On bavarde?» என்ற மொழி விளையாட்டுப் பெட்டியையும் பேச்சு பயிற்சியின்போது பயன்படுத்தலாம்.

3

## தனிப்பயனாக்கப்பட்ட சொற்களஞ்சியம்

«Mille feuilles»இன்magazinesஇல் மாணவர்கள் மூன்று வகையான சொற்களஞ்சியங்களை எதிர்கொள்கின்றனர்: «Vocabulaire de classe» (வகுப்பு சொற்களஞ்சியம்), «Nous parlons français!» (வகுப்பறை மற்றும் அன்றாட சொற்களஞ்சியம்), «Consignes» (அறிவுறுத்தலுக்கான சொற்களஞ்சியம்) . இந்த மூன்று பகுதிகளையும் மாணவர்கள், தாங்கள் உள்ளீடு உரைகளில் எதிர்கொண்ட வார்த்தைகள் மற்றும் வெளிப்பாடுகள் கொண்டு உருவாக்கப்பட்ட தங்கள் சொந்த சொற்களஞ்சியத்திலிருந்து «Vocabulaire personnel» தன்னிச்சையாகப் பூர்த்தி செய்வார்கள்.

4

## சொந்த கண்டுபிடிப்புக்கு இலக்கணம்

மாணவர்கள் கருப்பொருள் கொண்ட உரைகளை கையாளும் பொழுது, மொழிச் சட்டங்களைக் கண்டறிந்து அதன் விதிகளைத் தாங்களாகவே வரையறுக்கிறார்கள். «Mille feuilles» இன் activités இந்த கண்டுபிடிப்புச் செயல்பாட்டில் அவர்களை வழிநடத்துகின்றன, அவர்கள் பெற்ற அறிவை அவர்கள் சொந்த வார்த்தைகளில் பதிவு செய்ய ஊக்குவிக்கின்றன, மேலும் அதைத் தன்னிச்சையாகப் பயன்படுத்தவும் வழிகாட்டுகின்றன. இலக்கண கட்டமைப்புகளை நம்பிக்கையுடன் கையாள மாணவர்களுக்கு பல்வேறு விளையாட்டுக்களும் பயிற்சிகளும் இருக்கின்றன. விதிகளைப் பற்றிய அறிவு வளர்ச்சி 3வது பள்ளி ஆண்டில் தொடங்குகிறது, மேலும் இது பாடத்திட்டத்தின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டது. தெளிவான revue இல், கற்பவர்கள் தங்கள் மொழி கண்டுபிடிப்புகளைச் சேகரிக்கின்றனர், அதை அவர்கள் எந்த நேரத்திலும் மீண்டும் பார்க்க முடியும். 5 வது பள்ளி ஆண்டு முதல் விளக்கப்படமும் மற்றும் வயதுக்கு ஏற்ற வகையில் கொடுக்கப்பட்ட விதிகள் புத்தகமும் mini-grammaire வடிவில் கிடைக்கும்

5

## ஊக்கமளிக்கும் உள்ளடக்கம்

இந்த உள்ளீடுகளின் உள்ளடக்கம் பிரெஞ்சு மொழி குழந்தைகள் மற்றும் இளைஞர் இலக்கியங்களிலிருந்து வருகிறது: படம், கதை அல்லாத பிற புத்தகங்கள், காமிக்ஸ், கவிதைகள் அல்லது நாடகங்கள் - என எதுவாக இருப்பினும் எல்லா நூல்களும் வயதுக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட்டவை, மேலும் மாணவர்களுக்கு ஊக்க மற்றும் அடையாள திறனைக் கொடுப்பதாக உள்ளன. எல்லா மாணவர்களும் ஒரே வேகத்தில் கற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற உண்மையை கணக்கில் எடுத்துக்கொண்டு கற்பித்தல் உபகரணம் அதற்கு ஏற்றார்போல் உருவாக்கப்பட்டுள்ளது. பாடல்கள்களும் மற்றும் வீடியோக்களும் கூட அந்தந்த வயதினருக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. அவர்கள் உடனடியாக உரைகளை முழுமையாகப் புரிந்துகொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பு இல்லை. ஒவ்வொரு வார்த்தையும் தெரியாவிட்டாலும், உள்ளடக்கத்தை மறைவிலக்கம் செய்து புரிந்துகொள்ள உதவும் உத்திகளை மாணவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். அவர்களின் முந்தைய அறிவைப் பயன்படுத்தி, படங்களையும் குரல்களையும் பகுப்பாய்வு செய்து, அனுமானங்களை உருவாக்கி, அதன் மூலம் அர்த்தங்களை கண்டறிகிறார்கள். அவர்கள் இந்தத் திறன்களை பிற வெளிநாட்டு மொழிகளைக் கற்றுக் கொள்ளும் பொழுது மீண்டும் உபயோகிக்கலாம்.

6

## சோதனை செய்யப்பட்டு மேலும் உருவாக்கப்பட்டது

அறிமுகப்படுத்தப் படுவதற்கு முன்பு «Mille feuilles» நான்கு மண்டலங்களில் 35 வகுப்புகளில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இந்த பைலட் திட்டத்தின் கருத்துக்கணிப்பு முடிவுகளும் கண்டுபிடிப்புகளும் கற்றல் உபகரணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆனாலும் வேண்டிய அளவுக்கு இல்லை: «Mille feuilles» தொடர்ந்து மேம்படுத்தப்படும். ஷுல்வர்லாக் பிளஸ் கற்பிப்பவர்கள், ஆசிரியர்கள், ஆசிரியர்கள் கழகம், ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் மற்றும் மண்டலங்களுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளது. இந்த கற்பித்தல் உபகரணங்களில் அலுவலகங்களிலிருந்து வரும் பின்னூட்டங்களும், நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், அன்றாட பள்ளி வாழ்க்கையின் டிஜிட்டல் மயமாக்கல், புதிய தேவைகளையும் வாய்ப்புகளையும் உருவாக்குகிறது: «Mille feuilles» இந்த புதிய வளர்ச்சிகளுக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள்வது மட்டுமல்லாமல், இதை ஒரு புதுமையான கற்பித்தல் உபகரணமாக வடிவமைக்கிறது.

7

## தனிப்பயனாக்கப்பட்ட கற்றல்

நவீன பாடங்கள் தனிப்பட்ட கற்றலுக்கு நிறைய வாய்ப்பை வழங்குகின்றன. மாணவர்கள் தங்களது தனிப்பட்ட திறனை வளர்த்துக் கொள்ள முடியும் மற்றும் அவர்கள் தேவைகளையும் விருப்பங்களையும் அனுமதிக்க, வேண்டிய வழிவகைகளைக் கண்டறிய முடியும் என்பதற்காகவே, «Mille feuilles»இல் பெட்டகக் கட்டமைப்பு மற்றும் வெளிப்படையான பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. வேகமாக் கற்பவருக்கு மேலதிகப், பயிற்சிகள் வழங்கப்படுகின்றன அதேநேரத்தில் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய போதுமான உதவிகள் இருக்கின்றன. அனைத்து டிஜிட்டல் உபகரணங்களுக்கும் கற்றல் விளையாட்டுகளுக்கும் இலவச அனுமதி கொடுப்பது, அவரவர் வேகத்தில் தன்னிச்சையாகப் பயிற்சி செய்வதை எளிதாக்குகிறது.

8

## பல்வேறு விதமான பயிற்சி உபகரணங்கள்

வழக்கமான கற்பித்தல் உபகரணங்களில் இலக்கணம் மற்றும் பயிற்சிகளுக்கு இடையே ஒரு கடுமையான பிரிவு இருக்கும், பெரும்பாலும் தலைப்பு உள்ளடக்கத்திற்கும் இந்த பயிற்சிகளுக்கும் எந்த சம்பந்தமும் இருக்காது. «Mille feuilles» போன்ற உள்ளடக்கம் மற்றும் செயல்முறையை மையமாகக் கொண்ட கற்பித்தல் உபகரணங்களில், கட்டமைப்பு மற்றும் வார்த்தை பயிற்சி தலைப்பு சார்ந்த activités உடன் பிணைக்கப்பட்டு, உறுதியான மொழி செயல்பாட்டு சூழ்நிலையில் நடைபெறுகிறது. அறிவை ஆழப்படுத்துவதற்கும் தானியங்கச் செய்வதற்கும் பரந்த அளவிலான பயிற்சி உபகரணங்கள் மற்றும் பணித்தாள் விளையாட்டுகள் வடிவத்தில் இருக்கின்றன. parcours இன் activités மற்றும் உள்ளீட்டு உரைகளுடன் இவை உள்ளடக்கம் சார்ந்த தொடர்பு கொண்டுள்ளது 5 மற்றும் 6 வது பள்ளி ஆண்டுக்கான magazinesஇல் ஒவ்வொரு parcoursன் முடிவிலும் விருப்பத்திற்கு உட்பட்ட தலைப்பு «1001 feuilles» உருவாக்கப்பட்டன. இது parcoursஇல் மேலும் பணிகள் மற்றும் மாறுபட்ட பயிற்சி உபகரணங்களைக் கொண்டுள்ளது

9

## எளிதானது மற்றும் தெளிவானது

இனி தனித்தனி காகிதங்களோ பல புத்தகங்களைப் புரட்டுதலோ தேவையில்லை! «Mille feuilles» தலைப்புப் புத்தகமும் பணிப்புத்தகமும் ஒருங்கிணைந்த ஒன்று. மாணவர்கள் மொழி உதவிகள், உத்திகள் மற்றும் விதிகளுக்கான குறிப்புகள் எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ பெறுவார்கள். parcours இன் கட்டமைப்பு மற்றும் தெளிவான விளக்கம், கற்பித்தல் உபகரணங்களுடன் தன்னிச்சையாக வேலை செய்வதையும் உள்ளுணர்வுடன் அதை அறிந்துகொள்வதையும் உறுதிப்படுத்துகிறது magazines மற்றும் revue ஆகியவை எழுதுவதற்கும் வரைவதற்கும் தனிப்பட்ட பணிப்புத்தகங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இது மாணவர்களுக்கு ஏராளமான நன்மைகளைக் கொண்டுள்ளது: அவர்கள் சொல் விளக்கங்கள், மொழிபெயர்ப்புகள், விதிகள் மற்றும் கண்காணிப்புகளை நேரடியாக அவ்விடத்திலேயே பதிவு செய்யலாம். அவர்கள் முக்கிய சொற்களைக் குறித்துக் கொள்ளலாம் ஓவியங்களை வரையலாம் மற்றும் புரிந்து கொள்ள ஏதுவாக இருக்கும் பிற உதவிகளைச் சேர்க்கலாம். கடைசியாக பணி புத்தகத்தில் உள்ள பயிற்சிகளை அங்கேயே நேரடியாகச் செய்யலாம் உள்ளீட்டு நூல்களுடன் தொடர்ச்சியான பணிகளை எளிதாக்கும் பொருட்டு, இவை 3 மற்றும் 4 வது பள்ளி ஆண்டில் உள்ளவர்களுக்கு A3 அளவு சுவரொட்டிகளாகவும் வழங்கப்படுகின்றன.

10

## மலிவானது

«Mille feuilles» கற்பித்தல் உபகரணம் சி.எச்.எஃப் 29.50 (பள்ளிகளுக்கான விலை), இது மண்டலத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலை வரம்பிற்குள் உள்ளது (சி.எச். எஃப் 40.00). இந்தத் தொகுப்பில் பள்ளி ஆண்டுக்குத் தேவையான அனைத்து ஆவணங்களும் அடங்கும். இதில் நான்கு வண்ண magazines, revue மற்றும் fichier (குறியீட்டு அட்டைகள் மற்றும் பெட்டி) ஆகியவை அடங்கும். டிஜிட்டல் உள்ளடக்கத்தைப் பயன்படுத்துவதும் விலையில் அடங்கும்: magazines, fichierமற்றும் கற்றல் விளையாட்டுகள்.

# தவறு செய்ய தைரியம்

உங்கள் பிள்ளை எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் கற்றுக்கொள்ள மாட்டார், மாறாக படிப்படியாக . மொழி கற்றலின் வயதைப் பொருட்படுத்தாமல் இது தவறு செய்ய அனுமதிக்கிறது, ஏனென்றால் தவறுகள் கற்றலின் ஒரு பகுதியாகும். ஆரம்பத்திலிருந்தே மாணவர்கள் பிரெஞ்சு மொழியில் பேசும் அல்லது எழுதும் அனைத்தும் சரியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக: தவறுகள், கற்பவர்கள் புதிய மொழியை தைரியமாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கான அறிகுறியாகும். தவறுகளைச் செய்வதற்கான தைரியம் வெற்றிகரமான கற்றலுக்கு முக்கியமானது மற்றும் தவறுகளை அனுமதிக்கும் கற்றல் சூழல் தேவைப்படுகிறது. கற்றலுக்கு நன்மைபயக்கும் இடங்களில் ஆசிரியர் கவனமாக தவறுகளைச் சரி செய்கிறார். அனைத்து தவறுகளையும் சரிசெய்வது மாணவர்களை தடுக்கும் மற்றும் கற்றலிலும் குறுக்கிடும்.

**உங்கள் குழந்தைகளின் உரைகளை திருத்துவதை தவிர்க்கவும். ஆசிரியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தவறுகளை விட்டுவிடுங்கள். தவறுகள் எந்த வகையிலும் சரியான படிவத்தை, பின்னர் கற்றுக்கொள்வதில் தலையிடாது என்பதில் நம்பிக்கை வைத்திருங்கள்.**

குறிப்பாக கற்றலின் முதல் ஆண்டுகளில், மாணவர்கள் பிரெஞ்சு மொழியில் எதையாவது வெளிப்படுத்த அனுமதிக்கும் அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்: பேசுவதிலும் எழுதுவதிலும் உதவ அவர்கள் ஜெர்மன் அல்லது பிற மொழிகளில் உள்ள வெளிப்பாடுகளைப் பயன்படுத்தலாம். அவர்கள் தகவல்களை வரையலாம் படங்களை வைக்கலாம் அல்லது சைகைகளை பயன்படுத்தலாம். அவர்களுக்கு அகராதிகள் மற்றும் பிற மொழியியல் உதவிகளுக்கும் அணுகல் உண்டு


# நீங்கள் உங்கள் பிள்ளையை எவ்வாறு உகந்த முறையில் ஆதரிக்க முடியும்



பிரஞ்சு மொழியில் ஆர்வம் காட்டுங்கள்.

உங்கள் பிள்ளை புரிந்துகொள்வதை, பேசுவதை, எழுதுவதை பாராட்டுங்கள். தவறுகளையும் குறைகளையும் மையப்படுத்திப் பார்க்கவேண்டாம்.

ஒரு வெளிநாட்டு மொழியைக் கற்றுக்கொள்வதற்கு நேரமும் பொறுமையும் தேவை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதே நேரத்தில் இது தாய் மொழியில் அல்லது தாய் மொழிகளில் யோசிக்கும் ஆற்றலையும், செயல் திறமையையும் வளப்படுத்துகிறது. ஒரு பெற்றோராக, எந்தவொரு வெற்றிகளையும் முன்னேற்றத்தையும் புகழ்வதன் மூலம் கற்றல் செயல்முறையை ஆதரிக்கலாம்.



கற்றல்
உபகரணங்களிலோ
அல்லது பிரெஞ்சு
பாடங்களிலோ
வழங்கப்படாத
எதையும் செய்யுமாறு
உங்கள் பிள்ளைகளைக்
கேட்க வேண்டாம்.

உங்கள் பிள்ளைகளுக்கு, பள்ளிக்கு வெளியே பிரெஞ்சு மொழியைக் கற்க வாய்ப்புகளை வழங்குங்கள். இதைச் செய்ய பல வழிகள் உள்ளன: எடுத்துக்காட்டாக, புத்தகங்கள், பத்திரிகைகள், குறுந்தகடுகள் அல்லது திரைப்படங்கள் போன்ற பிரெஞ்சு குழந்தைகள் மற்றும் இளைஞர் ஊடகங்களைப் பற்றி உள்ளூர் நூலகத்தில் விசாரிக்கவும், ஸ்விட்சர்லாந்தின் பிரெஞ்சு மொழி பேசும் பகுதிக்கு(Romandie) உங்கள் குழந்தைகளுடன் பயணம் மேற்கொள்ளுங்கள், பிரெஞ்சு வானொலி மற்றும் தொலைக்காட்சியில் பொருத்தமான நிகழ்ச்சிகளைப் பற்றி உங்கள் பிள்ளைக்கு தெரியப்படுத்துங்கள்.

## அகராதி«mini-dic»




**அகராதி**
**பிரெஞ்சு -ஜெர்மன்**

**Dictionnaire**
**Allemand–Français**
**3.–5. வகுப்பு**

அகராதி
85112 20.00

முதல் அகர வரிசைப்படி கட்டமைக்கப்பட்ட மற்றும் வண்ண விளக்கப்பட அகராதி. இது ஜெர்மன் மற்றும் பிரஞ்சு மொழிகளில் , இந்த வயதினருக்காக சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, ஒவ்வொன்றும் சுமார் 2500 சொற்களைக் கொண்டுள்ளது, இவை ஓரளவுக்கு படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

பிரெஞ்சு-ஜெர்மன் மற்றும் ஜெர்மன்-பிரெஞ்சு அகராதிகள் பிரெஞ்ச் வகுப்புகளில் (எ.கா.«Mille feuilles») ஜெர்மன் பேசும் சுவிட்சர்லாந்து பகுதிகளிலும், பிரெஞ்சு பேசும் ஸ்விட்சர்லாந்து பகுதியில்(Suisse romande) ஜெர்மன் வகுப்பிலும் பயன்படுத்தப்படலாம்.

10 வது திருத்தப்பட்ட பதிப்பு 2021
© 2011 ஷுல்வர்லாக் பிளஸ் ஏஜி

«Mille feuilles - பெற்றோருக்கான தகவல்» கலை-89874 மற்றும் 89875 இன் ஒரு பகுதியாகும்

MIX
Papier aus verantwortungsvollen Quellen
FSC® C008457
www.fsc.org